கையேடு : 8

இலவச வெளியீடு

வெண்டி

நாளாந்த வருவாய்.
கூடிய வருமானம்.

விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி,
நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சு,
வட மாகாணம்.

நடுகைக் காலம்:

- பெரும் போகம் - புரட்டாதி பிற்பகுதி முதல் ஐப்பசி முற்பகுதி வரை.
- சிறு போகம் - சித்திரை முதல் வைகாசி முற்பகுதி வரை.

பயிரிடப்படும் இனங்கள்:

- எம்.ஐ. 5 - சிபார்சு செய்யப்பட்ட இனம். உலர் வலயத்திற் பெரும் போகச் செய்கைக்கு உகந்தது.
- எம்.ஐ. 7 - சிபார்சு செய்யப்பட்ட இனம். உலர் வலயத்திற் சிறு போகச் செய்கைக்கு உகந்தது.
- ஹரித்தா - சிபார்சு செய்யப்பட்ட இனம். மஞ்சள் சித்திர வடிவ வைரசு நோயைத் தாங்கக்கூடிய தன்மையுடையது.
- ரி.வி. 8 - பிராந்திய சிபார்சு செய்யப்பட்ட இனம்.
- பால்வெண்டி - சுதேச வர்க்கம்.
- ரெண்டர் கிறீன் (Tender Green) - கலப்பினம்.

விதைகள் பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள்:

01. மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம்.
    - திருநெல்வேலி (யாழ்ப்பாணம்)
    - எல்லப்பர் மருதங்குளம் (வவுனியா)
    - வண்ணாமோட்டை (மன்னார்)
02. அரசாங்க விதை உற்பத்திப் பண்ணை, வவுனியா.
03. உதவி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம்.

குறிப்பு

- கலப்பினத் தாவரத்தில் உருவான விதைகளை நடுகை செய்யக் கூடாது. ஆனால், உள்ளூர் இனங்களின் விதைகளையும், சிபார்சு செய்யப்பட்ட இனங்களின் விதைகளையும் மீள் நடுகைக்காகப் பயன்படுத்தலாம்.
- விற்பனை நிலையங்களில் கலப்பின வர்க்கங்களின் விதைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

விதைத் தேவை

50 சதுர மீற்றர் பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு 22.5 கிராம் விதை போதுமானது.

மண்ணின் தன்மை

நீர் நன்கு வழிந்தோடக்கூடிய, தளர்வான, சேதனப்பசளை நிறைந்த வளமான மணல் இருவாட்டி மண் நடுகைக்கு உகந்தது.

நிலம் பண்படுத்தல்

- 20 செ.மீ. - 25 செ.மீ. ஆழம் வரை நிலத்தைக் கொத்திப் பண்படுத்தவும்.
- நடுகைக்கு முன்னர் மண் நன்கு தூர்வையாக்கப்படல் வேண்டும்.

நடுகை இடைவெளி

வெண்டியை தனிப் பயிராகப் பயிரிடுவதற்குரிய நடுகை இடைவெளி (90 செ.மீ. X 60 செ.மீ.) கீழே படத்திற் காட்டப்பட்டுள்ளது.

நடுகைக்குழி அமைத்தல்



நடுகை

- விதைகளை நடமுன் 24 மணித்தியாலம் நீரில் ஊறவிடவும்.
- நடுகைக்குழியில சேதனப்பசளை (நான்கு குழிகளுக்கு ஒரு கடகம்) இட்ட பின்பு குழிக்கு 3 - 4 விதைகளை சற்று இடைவெளி இருக்கக் கூடியவாறு 1 - 2 செ.மீ. ஆழத்தில் நாட்டவும்.
- ஆழமாக விதையை நாட்டல் முளைத்தலைத் தாமதப்படுத்தும்.
- விதைத்து இரண்டு கிழமைகளின் பின்னர் பலவீனமான நாற்றுக்கள் அகற்றப்பட்டு ஒரு குழிக்கு இரண்டு நாற்றுக்கள் இருக்கக்கூடியவாறு விடவும்.

நான்கு இலைகளுடைய பருவத்தை அடைந்த நாற்றுக்கள்

நீர்ப்பாசனம்

- விதைகளை நாட்டியதும் மண்ணைப் போதியளவு ஈரலிப்பாக்கவும்.
- விதை முளைத்து நான்கு இலைகள் உருவாகும் பருவம் வரை ஒவ்வொரு நாளும் நீர் ஊற்றவும்.
- பயிர் முளைத்த பின்னர் மண்ணின் ஈரலிப்பிற்கேற்ப 3 - 4 நாட்களுக்கு ஒரு தடவை நீர்ப்பாசனம் செய்யவும்.

வெண்டியின் வளர்ச்சிப் பருவங்கள்



களைக்கட்டுப்பாடு

- விதைத்து 2ஆம் 4ஆம் வாரங்களிலும், பூக்கத் தொடங்கும் போதும் களைகளை அகற்றுவது அவசியம்.
- விதை நாட்டி 4ஆம் வாரமும், 8ஆம் வாரமும் களை கட்டுப்படுத்திய பின் மேற்கட்டுப் பசளையிடவும்.

பீடை முகாமைத்துவம்

- சுழற்சி முறைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளவும்.
- நோய் எதிர்ப்பு இனங்களைப் பயிரிடவும்.

மேற்கூறப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் மண்வாழ் பீடை மற்றும் நோய்த்தாக்கங்களைக் கட்டுப்படுத்தலாம்.

நோய்த்தாக்கம்

மஞ்சள் சித்திர வடிவ வைரசு நோய்

நோய் அறிகுறி

- இலை விளிம்புகள் வெளிறும். அதைத் தொடர்ந்து நரம்பு வெளிறல் ஏற்படும்.
- இளம் இலைகளில் மஞ்சள் நிற நரம்புகள் தோன்ற ஆரம்பிப்பதுடன் அவை கடும் - மென்பச்சை நிறப்பகுதிகளினால் சூழப்பட்டும் காணப்படும்.
- காய்கள் சிறியதாகவும், உருமாறியும், வெளிறியும் காணப்படும். பாதிக்கப்பட்ட பயிர்களில் வளர்ச்சி குன்றிக் காணப்படுவதுடன் விளைச்சலும் குறைவடையும்.

மஞ்சள் சித்திர வடிவ வைரசு நோயினால் தாக்கப்பட்ட வெண்டி இலையின் தோற்றம்

நோய்க்கட்டுப்பாடு

- வைரசு நோயைக் கிருமி நாசினியால் கட்டுப்படுத்த முடியாது. எனவே, பாதிக்கப்பட்ட தாவரத்தை உடனடியாக அகற்றி எரிக்கவும்.
- நோய்த்தொற்று இல்லாத விதைகளை நடுகைக்குப் பயன்படுத்தவும்.
- களைகளைக் கட்டுப்படுத்தவும். ஏனெனில், களைகள் நோய்க்காவியின் பரம்பலை அதிகரிக்கும்.
- பிரதேசதத்திற்கு ஏற்ற நடுகைக் காலத்தை அறிந்து அக்காலத்தில் நடுகை செய்யவும்.

அறுவடை

- பயிர் நாட்டி 50 - 55 நாட்களில் பின்னர் அறுவடை செய்ய முடியும்.
- ஒன்றுவிட்ட ஒரு நாள் கத்தியால் அறுவடை செய்யவும்.

விளைச்சல்

1/4 ஏக்கருக்கான மொத்தச் செலவு (ரூபா)	28.000.00
1/4 ஏக்கருக்கான உற்பத்தி (கிலோ கிராம்)	1200
1/4 ஏக்கருக்கான வருமானம் (ரூபா)	72,000.00

தொழில்நுட்ப ஆலோசனை:
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

Harikanan (Pvt.) Ltd., Jaffna.